**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.71/2022**

**2025** ம் வருடம் ஜுன் திங்கள் 11 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : சுலைமான் (PW3) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதன்மை விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் 3 ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. தாவா சொத்திற்குரிய SLR சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1 ஆகும்.

3. கடந்த 07.03.2005 ந் தேதி மலையழகு, கிருஷ்ணன், பழனி, முனியசாமி, பாண்டியம்மாள், முருகேசன் என்ற முருகன், பழனி, ஆகியோர் அழகர்சாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பவர் ஏஜென்ட் பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. கடந்த 29.04.2005 ந் தேதி பவர் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தில் முழுவதிலும் தட்சிணாமூர்த்திக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. கடந்த 09.12.2005 ந் தேதி தட்சிணாமூர்த்தி என்பவர் ஜலாலுதின், முகம்மது இப்ராகிம் ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்த கிரையப்பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. கடந்த 03.01.2012 ந் தேதி ஜலாலுதீன் இறந்த பிறகு ஜலாலுதின் மனைவியான மகுதம் பீவி தாவா சொத்தின் பிரிபடாத சரிபாதியை தமிழ்நாடு தவ்ஹித் ஜமாத்துக்கு பொருளாளர் ஹுமாயூன் கபீர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த

கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆகும்.

7. கடந்த 27.12.2012 ந் தேதி தாவா சொத்தின் மறுபாதியை முகமது இப்ராகிம் ஹிதாயத்துல் இஸ்லாம் இளைஞர் நற்பணி மன்றத்திற்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ. 6 ஆகும்.

8. கடந்த 08.07.2020 ந் தேதி கடலாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 151/2019 ல் ஏற்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

9. கடந்த 08.07.2020 ந் தேதி கடலாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 151/2019 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகும்.

10. கடந்த 17.03.2022 ந் தேதி 2ம் பிரதிவாதியான மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி